இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 303 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 30 – செவ்வாய்க்கிழமை 13 ஜூன் 2023 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 303 : Thiruvalluvar Year - 2054 - Vaikasi 30 - Tuesday 13 June 2023 - Chennai 12 Pages ₹ 5.00


## ரூ.75.95 கோடியிலான குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்தைப் பயன்படுத்தி

# நெல் உற்பத்தியை உயர்த்திடுவீர்!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், காவிரி டெல்டா பகுதிகளில் உள்ள விவசாய பெருமக்கள் குறுவை சாகுபடி செய்ய மேட்டூர் அணையிலிருந்து நேற்று (12.6.2023) தண்ணீர் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், சேலம் மாநகராட்சி மேயர் ஆர்.ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் செ.செந்தில்குமார், டாக்டர் பொன்.கௌதம் சிகாமணி, எஸ்.ஆர்.பார்த்திபன், ஏ.கே.பி.சின்ராஜ், கே.ஆர்.என். ராஜேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.இராஜேந்திரன், இரா.அருள், எஸ்.சதாசிவம், துணை மேயர் திருமதி மா.சாரதா தேவி, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், நீர்வளத் துறையின் முதன்மை தலைமைப் பொறியாளர் இராமமூர்த்தி, அரசு உயர் அலுவலர்கள், விவசாய பெருமக்கள் கலந்துகொண்டனர்.

## மேட்டூர் அணையைத் திறந்து வைத்து விவசாயிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**மேட்டூர், ஜூன் 13 -**

**“ரூ.75.95 கோடியிலான குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்தைப் பயன்படுத்தி நெல் உற்பத்தியை உயர்த்திடுவீர்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேட்டூர் அணையைத் திறந்து வைத்து விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுத்தார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், காவிரி டெல்டா பகுதிகளில் உள்ள விவசாய பெருமக்கள் குறுவை சாகுபடி செய்ய மேட்டூர் அணையிலிருந்து நேற்று (12.6.2023) தண்ணீர் திறந்து வைத்து, செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கம்!

தமிழ்நாட்டில் வேளாண் உற்பத்தியை உயர்த்துவதற்காகவும் உழவர்களின் வாழ்வை மேம்படுத்துவதற்காகவும் நாம் ஆட்சிப் பொறுப்பேற்றதற்கு பிறகு அதற்கான முன்னெடுப்புகளை எல்லாம் நாம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் வேளாண்மைக்கு என்று தனி நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து, உழவர் நலன் சார்ந்த திட்டங்களை வெற்றிகரமாக நம்முடைய அரசு செயல்படுத்தி வருகிறது. அதில் குறிப்பாக கலைஞர் அவர்களின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்தினோம். அதன்மூலம் இரண்டு ஆண்டுகளில் இதுவரை 23.54 இலட்சம் உழவர்கள் பயனடைந்து இருக்கிறார்கள். இதுவரை இல்லாத சாதனையாக மிகக் குறுகிய காலத்தில் 1.50 இலட்சம் இலவச வேளாண் மின் இணைப்புகள் புதிதாக வழங்கப்பட்டு இருக்கிறது.

### 3வது ஆண்டாக குறிப்பிட்ட தேதியில் அணை திறப்பு!

இப்படி எண்ணற்ற திட்டங்களை வேளாண் துறை மூலமாக நிறைவேற்றி வருகிறோம். அதேபோல தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக மேட்டூர் அணையைக் குறிப்பிட்ட நாளான ஜூன் 12ஆம் நாளிற்குள் திறந்து வைத்து வருகிறேன்.

குறிப்பிட்ட நாளில் திறந்து வைத்தால் மட்டும் போதாது, கடைமடை வரை காவிரி நீர் சென்றடைய வேண்டும் அதற்கும் திட்டமிட்டோம். அதற்காக கடந்த 2021ஆம் ஆண்டில், 62 கோடியே 91 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், காவிரி நதிநீரை திறம்பட பயன்படுத்தி, குறுவை நெல் சாகுபடியை அதிகரிக்க வேண்டும் என்பதற்காக, நம்முடைய அரசு 61 கோடியே 9 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் குறுவை நெல் சாகுபடி தொகுப்பு திட்டத்தைச் செயல்படுத்தியது. இதன் காரணமாக, காவிரி நதிநீர் கடைமடை பகுதி வரைக்கும் சென்று, கடந்த 2021ஆம் ஆண்டு குறுவைப் பருவத்தில் 4.9 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.

அதேபோல், கடந்த 2022ஆம் ஆண்டில், மேட்டூர் அணையில் நீர் இருப்பு திருப்திகரமாக இருந்த காரணத்தினால், 19 நாட்கள் முன்னதாகவே, அதாவது மே 24ஆம் நாள் அன்றே மேட்டூர் அணையினை திறக்க நம்முடைய அரசு ஆணையிட்டது.

19 நாட்கள் முன்னரே அணை திறந்தாலும், அதற்கு முன்கூட்டியே அனைத்து கால்வாய்களையும் தூர் வாருவதற்கு நீர் வளத்துறை ரூபாய் 80 கோடி மதிப்பீட்டில் அரசு ஆணையினை உரிய காலத்தில் வெளியிட்டு, அந்தப் பணிகள் எல்லாம் மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன. பணியின் தரம் குறித்து அனைத்துத் தரப்பு உழவர்களும் அப்போது மகிழ்ச்சியுடன் பாராட்டு தெரிவித்தனர்.

கடந்த ஆண்டும் காவிரி நதிநீரைத் திறம்பட பயன்படுத்தி நெல் உற்பத்தியை உயர்த்தும் நோக்கத்தில், ரூபாய் 61 கோடியே 12 லட்சம் செலவில் குறுவை நெல் சாகுபடி தொகுப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டது.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### தூய்மை காவலர்களின்

## மாதாந்திர மதிப்பூதியம் உயர்வு!

சென்னை, ஜூன் 13 –

ஊரகப்பகுதிகளில் பணிபுரியும் தூய்மை காவலர்களின் மாதாந்திர மதிப்பூதியம் உயர்த்தப்பட்டுள்ளது. மாதாந்திர மதிப்பூதியம் உயர்த்தி வழங்கப்படும் என சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டிருந்தநிலையில் தற்போது அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மாதாந்திர மதிப்பூதியத்தை 3600 ரூபாயிலிருந்து 5 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி தமிழக அரசு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு 396 கோடி ரூபாய் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிட்டுள்ளது.

## தமிழ்நாட்டில் எங்குமே மின் தடை என்பது இல்லை!

### அமைச்சர் செந்தில் பாலாஜி தகவல்!

*கோவை, ஜூன் 13-*

*தமிழ்நாட்டில் எங்குமே மின் தடை இல்லை என்று மின் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி கூறினார்.*

*கோவை மேட்டுப் பாளையம் ரோடு எம்.ஜி.ஆர். மார்க்கெட்டில் மூலதன மானிய நிதி திட்டத்தின் கீழ் ரூ.3.7 கோடி மதிப்பில் புனரமைத்தல் மற்றும் கூடுதல் அபிவிருத்தி பணிகளை அமைச்சர் செந்தில்பாலாஜி தொடங்கி வைத்தார்.*

*பின்னர் அவர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-*

*கோவை மாநகராட்சி பகுதிகளில் பழுதடைந்த சாலைகளை சீரமைக்க முதலமைச்சர் ரூ.200 கோடி சிறப்பு நிதி ஒதுக்கினார். தற்போது அந்த நிதியின் மூலம் பணிகள் நடைபெற்று வருகிறது. பல்வேறு இடங்களில் சாலை பணிகள் நிறைவுற்று அவை மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இன்று ரூ.71 கோடி மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.*

*மின் கட்டண உயர்வை பொருத்தவரை தமிழ்நாடு அரசு மிக தெளிவான விளக்கம் கொடுத்து விட்டது. அதன்படி வீடுகளுக்கு மின் கட்டண உயர்வு இல்லை. மேலும் விசைத்தறி, கைத்தறி, விவசாயத்திற்கு வழங்கப்பட்டும் வரும் இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படும். வணிக நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மின் கட்டணத்தில் மட்டுமே சிறிய அளவிலான மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அந்த மாற்றத்தையும், ஒன்றிய அரசின் அறிவுறுத்தலின் படியே மின்சார ஒழுங்கு முறை ஆணையம் மாற்றம் செய்துள்ளது.*

*மின்வெட்டு தொடர்பாக ஓ.பி.எஸ். அறிக்கை வெளியிட்டு இருக்கிறார். நான் கேட்கிறேன் ஓ.பி.எஸ். வீட்டில் மின் தடை ஏற்பட்டதா? அல்லது அவரது தோட்டத்தில் மின் தடை ஏற்பட்டதா?*

*இவ்வாறு அமைச்சர் செந்தில் பாலாஜி பேட்டியளித்தார்.*

## பா.ஜ.க. ஆட்சியில் ரஃபேல் - அதானி ஊழல்களினால்

# இந்தியாவே தலைகுனிந்து நிற்கிறது!

## மேட்டூரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

**மேட்டூர், ஜூன் 13 -**

**“பா.ஜ.க. ஆட்சியில் ரஃபேல் - அதானி ஊழல்களினால் இந்தியாவே தலைகுனிந்து நிற்கிறது!” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேட்டூரில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

**செய்தியாளர் :** அ.தி.மு.க. கொண்டு வந்த திட்டங்களுக்கு தி.மு.க. பெயர் வைக்கிறது என்ற குற்றச்சாட்டை தொடர்ந்து எடப்பாடி பழனிசாமி சொல்கிறாரே?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** தொடர்ந்து நாங்கள் இதற்கு விளக்கம் சொல்லிக் கொண்டே இருக்கிறோம். இருந்தாலும் இப்போதும் கேட்கிறீர்கள். இதுமாதிரி நடந்து கொள்வது அ.தி.மு.க.வின் கலை, அவர்கள் பாணி தான் இது. சென்னையில் தி.மு.க. ஆட்சியில் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது கோயம்பேடு பேருந்து நிலையத்தை ஆசியாவிலேயே ஒரு மிகப்பெரிய பேருந்து நிலையமாக கட்டினோம். ஆனால் கட்டி முடித்து திறப்பு விழாவிற்கு முன்பு ஆட்சி மாற்றம். ஜெயலலிதா அம்மையார் அவர்களது பெயரை வைத்துக்கொண்டு அதை திறந்து வைத்தார்கள், நாங்கள் அதற்குக் கவலைப் படவில்லை.

அதே மாதிரி ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் தலைமைச் செயலகத்தை தி.மு.க. ஆட்சியில்தான் புதிதாக கட்டினோம். அதை ஆட்சிக்கு வந்து அதிமுக என்ன செய்தது? அதை அரசு மருத்துவமனையாக மாற்றி அரசியல் செய்தது. சென்னையில் இன்றைக்கு ஓடிக்கொண்டிருக்கக் கூடிய மெட்ரோ ரயில் திட்டத்தை நாங்கள் தான் தொடங்கி வைத்தோம். கலைஞர் முதலமைச்சராக இருந்த போது நான் துணை முதலமைச்சராக இருந்தேன். நானே ஜப்பான் நாட்டிற்குச் சென்று அங்கே நிதி உதவியைப் பெற்று அதன் மூலமாகத்தான் ஒன்றிய அரசினுடைய உதவியைப் பெற்று அதை நாம் தொடங்கி வைத்தோம். அன்றைக்கு அதை எதிர்த்தவர்கள் யார் என்று கேட்டீர்களானால், மறைந்த அம்மையார் ஜெயலலிதா அவர்கள். முதலமைச்சராக இருந்தபோது அதை அவர்கள் எதிர்த்தார்கள், மெட்ரோ தேவையில்லை என்று வெளிப்படையாகவே சொன்னார்கள். பின்னர் அதன் திறப்புவிழாவின் போது தன்னுடைய பெயரை பொறித்துக்கொண்டு கல்வெட்டையும் திறந்து வைத்தார்கள்.

அதே மாதிரி கோட்டூர்புரத்தில் இருக்கக் கூடிய பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்தை திமுக ஆட்சியில்தான் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோதுதான் கட்டித் திறந்து வைத்தார். ஆனால் அதிமுக ஆட்சிக்கு வந்தபிறகு அதை பாழ்படுத்தவேண்டும் என்று அதை எப்படியெல்லாம் சீரழித்தார்கள் என்று உங்களுக்கெல்லாம் தெரியும். அதற்குப் பிறகு நீதிமன்றத்திற்குச் சென்று வாதாடி, போராடி அதை நிலைநாட்டி இருக்கிறோம். இப்படியே சொல்லிக் கொண்டு சென்றால், அந்தப் பட்டியல் இன்னும் போகும். இந்த வரலாறுகள் எல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமிக்கு தெரியாது என்று நினைக்கிறேன். இதையெல்லாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

### அண்ணா நூற்றாண்டு நூலகத்தை சீரழித்தார்கள்!

அதேபோல, அம்மா உணவகம். ஆட்சிக்கு வந்தவுடன் அதை மூடிவிடுவார்கள், மூடிவிடுவார்கள் என்று திட்டமிட்டு ஒரு பொய் பிரச்சாரமே செய்தார்கள். அதை இது வரைக்கும் மூடவில்லை, அது தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

இன்னொன்று சொல்ல வேண்டுமென்றால், பள்ளிக்கூடத்திற்கு செல்லும் பிள்ளைகளின் புத்தகப்பையில் அவர்கள் ஆட்சியில் அம்மையார் ஜெயலலிதா அவர்களின் படமும், முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி படமும் போட்டு அன்றைக்கு மாணவர்களுக்கெல்லாம் கொடுத்தார்கள். அதில் நாம் ஆட்சிக்கு வந்த நேரத்தில் சிறிது மீதம் வந்திருந்தது. அந்த நேரத்தில் அரசு அதிகாரிகளெல்லாம் என்னிடத்தில் வந்து கேட்டார்கள், இதை மாற்றி விடலாம். ஏனென்றால், ஏற்கனவே இருந்த முதலமைச்சர் படம் இருக்கிறது, எனவே உங்கள் படத்தை போடுகிறோம் என்று சொன்னார்கள். யார் படமும் போட வேண்டாம், இருப்பது அப்படியே இருக்கட்டும். இதை மாற்றினீர்கள் என்றால், பல கோடி ரூபாய் இழப்பு வரும், அந்த இழப்பை அரசு ஏற்றுக் கொள்ளாது, எனவே அப்படியே இருக்கட்டும் என்று சொன்னவன்தான் நான்.

எனவே இதையெல்லாம், இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கக்கூடிய எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமிக்கு நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### மோடி மீது அமித்ஷாவுக்கு என்ன கோபமோ?

**செய்தியாளர் :** அமித் ஷா தமிழ்நாடு வந்தார், இரண்டு முறை தமிழர் ஒருவர் பிரதமர் ஆவதை தி.மு.க. தான் தடுத்தது என்று கூறியிருக்கிறாரே . . .

**மு.க.ஸ்டாலின்:** அதை வெளிப்படையாக அவர் சொன்னாரென்றால், அதற்கு உரிய விளக்கத்தை நம்மால் சொல்ல முடியும்.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்